செ.வெ.எண்: 100/2017 நாள்: 07.02.2017

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், தோவாளை வட்டத்தில், சீமைக்கருவேல் மரங்களை அகற்றுவது தொடர்பான பணிகளை இன்று (07.02.2017) நேரில் பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.**

தமிழகத்தில் உள்ள நீர்நிலைகள், பாசன வாய்க்கால்கள், சாலையோரங்கள் மற்றும் தனியார் நிலங்களில் இயற்கையாகவே வளர்ந்து வரும் சீமைக்கருவேல் மரங்கள் சுற்றுச்சூழலுக்கு தீங்கு விளைவிப்பதாகவும், அவற்றை அகற்றிட அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனவும் சென்னை, உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் தாக்கல் செய்த வழக்கு W.P.16485/2015, 16645/2015 ஆகியவற்றின் தீர்ப்புரையில், மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் பின்வருமாறு ஆலோசனைகள் வழங்கியுள்ளது.

அரசு நிலங்களில் உள்ள சீமைக்கருவேல் மரங்களை அகற்றிட சம்பந்தப்பட்ட துறைகள் நடவடிக்கை மேற்கொண்டு சீமைக்கருவேல் மரங்களை வேருடன் அகற்றிட வேண்டும் எனவும், தனியார் நிலங்களில் / பட்டா நிலங்களில் வளரும் சீமைக்கருவேல் மரங்களைப் பொறுத்த வரை, இம்மரங்கள் தானாகவே வளரக் கூடியவை என்பதாலும், சுற்றுச்சூழலுக்கு தீங்கு விளைவிக்கக் கூடியது என்பதாலும், சுகாதார பாதிப்புகள் உண்டாக்குவதாலும், இவற்றை வேருடன் அகற்றிட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும், பொது மக்களுக்கு இதனை விளம்பரபடுத்துமாறும் தெரிவித்துள்ளது.

அதனடிப்படையில், கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள பட்டாதாரர்கள் அவர்களுடைய நிலங்களில் சீமைக்கருவேல் மரங்கள் வளர்ந்திருந்தால், அவற்றை வேருடன் வெட்டி அப்புறப்படுத்துமாறும், இம்மரங்களை வளர்ப்பதற்கு அரசு ஆதரவு ஏதும் இல்லையெனவும் சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் தீமைகளை தடுப்பதற்காகவும், நில உடமைதாரர்கள் 10.02.17-ம் தேதிக்குள் அகற்றிட வேண்டுமாறு, மாவட்ட நிர்வாகத்தின் மூலம் ஏற்கெனவே தெரிவிக்கப்பட்டது.

இன்று (07.02.2017) கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், தோவாளை வட்டத்தில் சீமைக்கருவேல் மரங்களை அகற்றுவது தொடர்பான பணிகளை நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.

கன்னியாகுமரி மாவட்டம், செண்பகராமன்புதூர் ஊராட்சிக்குட்பட்ட கட்டளைகுளம், திருவாடுதுறையை சார்ந்த ஆதினத்திற்கு சொந்தமான பட்டா நிலங்கள், மரபாலம் அருகில் உள்ள பட்டா நிலங்கள், மெட் கல்லூரி வளாகத்தை சுற்றியுள்ள பட்டா நிலங்கள், ஆரல்வாய்மொழி ஏபிடி காற்றாலை பண்ணைக்கு சொந்தமான பட்டாநிலங்கள், முப்பந்தல் என்ற இடத்தில் உள்ள பட்டா நிலங்கள், பாம்பே பர்மா காற்றாலை பண்ணைக்கு சொந்தமான பட்டா நிலங்கள், முப்பந்தல், ஆரல்வாய்மொழி தேசிய நெடுஞ்சாலை பகுதியில் உள்ள அரசு புறம்போக்கு நிலங்கள் ஆகிய இடங்களில் உள்ள சீமை கருவேல் மரங்கள் அகற்றும்

பணிகளையும், அகற்றபட்ட நிலங்களையும், மேலும் அகற்றப்படவுள்ள நிலங்களையும், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று, பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைவில் முடித்திட பொதுமக்களை கேட்டுக்கொண்டார்.

கன்னியாகுமரி மாவட்டத்தில், நான்கு வட்டங்களில் ஒன்றான, தோவாளை வட்டத்தில், பட்டா நிலங்களில் உள்ள சீமைகருவேல் மரங்களை 24 சதவீதம் அகற்றப்பட்டுள்ளதாகவும், வருவாய்த்துறை புறம்போக்கு நிலத்தில் உள்ள சீமைகருவேல் மரங்கள் 23.44 சதவீதம் அகற்றப்பட்டுள்ளதாகவும் சம்பந்தப்பட்ட வருவாய்த்துறை (தோவாளை) அலுவலர்களால் தெரிவிக்கப்பட்டது.

ஆய்வின் போது, நாகர்கோவில் வருவாய் கோட்டாட்சியர் திரு.ஆர்.ராஜ்குமார், தோவாளை வட்டாட்சியர் திருமதி. ப. சாரதாமணி, வட்டார வளர்ச்சி அலுவலர் திருமதி. கலைச்செல்வி உள்ளிட்ட அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.